*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC* 214/2021

*Deposition of Witness for Prosecuting/Defence/Court PW* 1(*LW* -1)

*Name / Father's Name:* லட்சுமணன் த/பெ. சடையன்

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of* 1873 *of the day of* 19-07-2022

துவக்க நேரம் 12.05

**முதல் விசாரணை**

நான் தற்போது சின்னம்மாங்கோடு கருமந்துரையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள் தான். கடந்த வருடம் ஜனவரி மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒரு நாள் ஆஜர் எதிரிகள் மீது நான் தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கினை மனதில் வைத்துக் கொண்டு நான் சின்னம்மாங்கோட்டில் உள்ள எனது காட்டிற்கு நான் சென்று கொண்டு இருந்த போது ஆஜர் எதிரிகள் 3 பேரும் அங்கு வந்து எங்கள் மீதே வழக்கு போடுகிறாயா தேவடியா மகனே என்று சொல்லி அசிங்கமாக பேசினார்கள். ஈஸ்வரன் கட்டையால் எனது பின்னந்தலையில் அடித்தார். லட்சுமணன் இரும்பு கம்பியால் எனது மூக்கில் அடித்தார். சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். அங்கு மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் நடந்ததை சொன்னேன். புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆகும்.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

முடிவு நேரம் 12.10

S ARUNKUMAR
Digitally signed by S ARUNKUMAR
Date: 2022.07.19 18:10:37 +0530

நீதித்துறை நடுவர் எண்.2, ஆத்தூர்

*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: CC 214/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court PW 2(LW -2)*

*Name / Father's Name: சடையன் த/பெ. ராமகவுண்டர்*

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19-07-2022*

துவக்க நேரம் 12.10

**முதல் விசாரணை**

நான் தற்போது சின்னம்மாங்கோடு கருமந்துரையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள் தான். கடந்த வருடம் தை மாதம் 8 ஆம் தேதி ஆஜர் எதிரிகள் மீது நாங்கள் தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கினை மனதில் வைத்துக் கொண்டு எனது மகனை சின்னம்மாங்கோட்டில் உள்ள எனது காட்டிற்கு வந்து கொண்டு இருந்த போது ஆஜர் எதிரிகள் 3 பேரும் அங்கு வந்து எங்கள் மீதே வழக்கு போடுகிறாயா தேவடியா மகனே என்று சொல்லி எனது மகனை அசிங்கமாக பேசினார்கள். ஈஸ்வரன் கட்டையால் எனது மகனின் பின்னந்தலையில் அடித்தார். லட்சுமணன் இரும்பு கம்பியால் எனது மகனின் மூக்கில் அடித்தார். நான் சுமார் 30 அடி தூரத்தில் மஇருந்ததால் தடுக்க முடியவில்லை. நான் சத்தம் போட்டு கத்தியதில் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் எனது மகனை சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். நடந்த சம்பவம் பற்றி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

முடிவு நேரம் 12.15

S ARUNKUMAR
Digitally signed by S ARUNKUMAR
Date: 2022.07.19 18:10:52 +0530

நீதித்துறை நடுவர் எண்.2, ஆத்தூர்